

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் ஏற்பாட்டில் ஆசாரிபள்ளம் பகுதியில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 01.03.2025 அன்று பிறந்த அனைத்து குழந்தைகளுக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முதல்வரின் பிறந்தநாள் பரிசாக தங்க மோதிரங்களை அணிவித்து சிறப்பித்தார். நிகழ்ச்சியில் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் கிங்ஸிலி ஜெபசிங், உதவி உறைவிட மருத்துவர்கள் விஜயலட்சுமி, ரெனிமோள், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மண்டலத் தலைவர் இ.ஜவகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், மாநகர துணை செயலாளர் பி.வேல்முருகன், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை – தமிழர் எழுச்சி நாளாக

# கழக மீனவர் அணி சார்பில் நல உதவிகள் வழங்கிக் கொண்டாடுவோம்!

## அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 4 -

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் பிறந்நாள் தமிழர் எழுச்சி நாளாக கழக மீனவர் அணியினர் நல உதவிகள் வழங்கி மாநிலம் முழுவதும் கொண்டாடுவோம் என தி.மு.க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் 27.02.2025 அன்று காலை 10 மணியளவில் திருவெற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில துணைத் தலைவர்கள் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலத் துணை செயலாளர்கள் வீ.பி. பொன்னரசு, மு.தம்பித்துரை, ஜி. மனோகரன், க.எரிக் ஜீடு, வக.ஜெயபிரகாஷ், சி. புளோரன்ஸ், ஆர். பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மார்ச் 1ல் 72வது பிறந்த நாள் விழா காணும் முதலமைச்சர் கழகத்தலைவர் தேசம் வியக்கும் திராவிட நாயகர் முக. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை கழக மீனவர் அணியினர் மாவட்டம், மாநகரம், ஒன்றியம், நகர பகுதிகளிலும், மீனவ கிராமங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் செய்து கொண்டாடவும், மார்ச் மாதம் முழுவதும் மீனவர்களுக்கு படகு போட்டிகள், விளையாட்டு போட்டிகள், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் நலிந்த மீனவர்களுக்கு உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் கழகத்தலைவர் மீனவர் நலன்காக்கும் திராவிட நாயகர் அவர்கள் மீனவர் நலன் சார்ந்து வழங்கிய பல்வேறு நல திட்டங்களுக்காகவும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி முதல் பழவேற்காடு வரை உள்ள மீனவ கிராமங்களை இயற்கை சீற்றங்களில் இருந்தும் கடல் அரிப்பு, போன்ற மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு உறுதுணையாக, தூண்டில் வளைவுகள் மீன்பிடி இறங்கு தளங்கள் துறைமுகங் கள் என தமிழ்நாடு அரசின் சொந்த நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் கோடி அளவிற்கு திட்டங்கள் நிறைவேற்றி தந்தமைக்காகவும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் கடலில் எதிர்நாட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடிய மீனவர்களை மீட்பதற்கும் அவர்களின் உரிமைகளுக்காகவும் கழகத்தின் சார்பில் அயலக அணியை உருவாக்கி மீனவர்களை பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு மீட்டு அழைத்து வந்தற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

#### மீனவர் நலன் சார்ந்த முத்தான திட்டங்கள்!

இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுவரை எந்த முதல்வரும் செய்திராத வகையில் அந்த மாநாட்டில் 1000 கோடி ரூபாய் அளவில் மீனவர் நலன் சார்ந்த முத்தான 10 நலத்திட்டங்களை அறிவித்து அதை நிறைவேற்றி தந்தமைக் காவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 18.02.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மீனவர்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் இராமேஸ்வரம் மீனவர்கள் வைத்த கோரிக்கைகளை உடனடியாக பரிசீலனை செய்து ரூபாய் 360 கோடி நிதியை ஒதுகீடு செய்து நிறைவேற்றி தந்த மீனவர்க ளின் காவலர் முதலமைச்சர் - தலைவர் மு.க. ஸ்டா லின் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்கள் மறைக்கப்பட்ட மாமேதை எனவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் சிந்தனை சிற்பி சிங்கார வேலர் மாளிகை திறக்க ப்பட்டதும் சிங்கார வேலர் பெயரில் மீனவர் தொகுப்பு வீடுகள் திட்டம் தந்தது என என்றும் தி.மு.கழகத்தால் போற்றப்படும் சிந்தனை சிற்பி சிங்கார வேலருக்கு மேலும் மகுடமாக சென்னையில் சிங்கார வேலர் நினைவிடம் உள்ள லேடி லெவிங்டன் பள்ளியின் பெயரை சிந்தனை சிற்பி சிங்கார வேலர் பள்ளி என பெயர் மாற்றம் செய்திட வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள மீனவர் நலச்சங்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கனிவுடன் ஆய்வு செய்திட வேண்டும் என கழக மீனவர் அணி சார்பாக கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் வரலாறு காணாத கனமழையால் தத்தளித்தபோதும், புயலால் சேதமடைந்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களோடு மக்களாக நின்று அவர்களின் தேவைகளை போர்கால அடிப்படையில் நிறைவேற்றி தந்து நிவாரணம் அறிவித்து அவர்கள் துயரத்தில் துணை நின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அல்லும் பகலும் கொட்டும் மழையிலும் மக்கள் குறை தீர்க்க களத்தில் நின்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

#### ஒன்றிய அரசின் தீய எண்ணம்!

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் இருமொழிக் கொள்கையில் பயின்று, உலகத்தரத்திற்கு உயர்ந்த பல்லாயிரம் சாதனையாளர்களை பட்டியலிடலாம். தற்போதைய காலகட்டத்தில் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு பெரும் சவாலாக உள்ள புத்தகச் சுமைகளை குறைப்பது எப்படி என்று பெற்றோர்கள் சிந்திக்கும் வேளையில் கணக்கு, அறிவியல் போன்ற பாடங்களில் உள்ள கடினத் தன்மையை, பெரும் சவாலாக எடுத்து தினமும் நமது மாணவச் செல்வங்கள் கல்வி பயின்று வரும் நிலையில், கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மிக மிக தாழ்ந்த நிலையில் உள்ள மீனவர் சமுதாய இளம் தலைமுறையினர் பாரம்பரியமான மீன்பிடி தொழிலை விட்டு, உயர்படிப்புகள் படித்து முன்னேறி வேலை வாய்ப்புகளை பெற வேண்டும் என முயன்று முன்னேறும், வேளையில், இந்தி என்ற மூன்றாவது மொழியை திணித்து வட நாட்டவர் வாழ, தமிழ்நாட்டவர் வேலை வாய்ப்பை பெற முடியாமல் தடுக்கும் ஒன்றிய அரசின் தீய எண்ணத்தால், அதிகார ஆணவத் திமிரோடு கொண்டுவரத் துடிக்கும் மும்மொழி கொள்கையை, கட்டாய இந்தி திணிப்பை தமிழ்நாட்டு மீனவ மக்களும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை மேலும் இன்னொரு மொழிப்போரை தமிழர்கள் மீது திணிக்க வேண்டாம் எனவும் ஒன்றிய கல்வி அமைச்சருக்கும், ஒன்றிய அரசுக்கும் கழக மீனவர் அணி சார்பாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட மீனவரணி நிர்வாகிகள்: கே.தேசிங்கு து.அல்லிமுத்து இரா.பிரகாஷ் எம்.எல்.வேலன், எஸ்.செல்வம், டி.மகேந்திரன், ஆர்.குமரன், வி.ரமேஷ் எஸ்.கே.இளங்கோ, ஏ.சுரேஷ், நல்லதம்பி, மதிவாணன், கிருபானந்தம், என். சண்முகம், குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.சீ. கிருஷ்ணசாமி

**மார்ச் 4 (2001)**



**பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!” எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திக்கெட்டும் வெற்றி முரசு கொட்டும் திராவிடப் பேரரசர் வாழ்கவே!



தமிழர்களின் வாழ்வில் ஒரு நன்னாள், கழகத் தோழர்களுக்கும், தொண்டர்களுக்கும் பொன்னாள்!

திராவிட இயக்கங்களின் வழி, வழிவந்த கொள்கைக் குன்றம், தியாகச்சீலர், திராவிடப் பேரரசர், கழகத் தலைவர் தளபதியவர்களின் பிறந்த நாள் மார்ச் 1.

உலக அளவில் ரஷ்யப் புரட்சித்தலைவர் லெனின் அவர்களையடுத்து, இரும்புமனிதரென புகழெடுத்த ஜோசப் ஸ்டாலின் மறைந்த ஆண்டு.

இந்தியாவில் தமிழகத்தில், தமிழர்களையும், அவர் தமது உணர்வுகளையும் “நான்சென்ஸ்” என்று சிறுமைப்படுத்திய பண்டிதர் அவர்களுக்கு கருப்புக்கொடி, டால்மியாபுரம் பெயர் எதிர்ப்பு போராட்டம் என தமிழகமே தனலிடையிட்ட மெழுகுபோல் தத்தளித்த 1953.

கழகத் தலைவர் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், திமுகவின் முன்னணி தலைவர்கள் என தமிழ்நாட்டின் பட்டி தொட்டி எங்கும் பம்பரமாகச் சுழன்று, அனல் கக்கும் ஆவேச முழக்கமிட்டிருந்த காலம்.

இத்தகு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆண்டில் தான் நமது மன்னவர், தென்னவர் போற்றும் திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் பிறந்தார்.

இளம்வயதிலேயே இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, தந்தை வழியில் தன்னை அர்ப்பணித்து, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.வை ஏற்படுத்தி, நாடகங்கள் நடத்தி, கொள்கையைப் பரப்ப அந்நாளில் “அணிலும் மண்சுமந்து, அகமகிழ்ந்தார் ராமபிரான். “ எனும் கம்பனின் வரிகளைப்போல், ஆடுதாண்டும் காவேரியாய் அண்ணாவின் சிந்தையில் பதிந்து, இன்று அகண்ட காவிரியாய் தமிழினத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக உயர்ந்து நிற்கும் தளபதியவர்கள் பிறந்த நாள் மார்ச் 1.

பொதுவாழ்வுப் பூங்காவில் நுழைந்த இளந்தலைவருக்கு, ரத்தினக் கம்பளம் விரிக்கப்படவில்லை. வெஞ்சாமரம் வீசப்பட வில்லை. மாறாக நெருக்கடி எனும் வதைப் படலம் அவரை வாட்டி, மிதித்து, துவைத்து, அடித்து, அலங்கோலப் படுத்தியது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரின் மகன், மிகப் பெரிய ஜனநாயக இயக்கத்தின் தலைவரின் குடும்பத்தின் வாரிசு. இளம்வயது மெலிர்தேகம் என்றெல்லாமா கருணை காட்டப்பட்டது மிசா கொட்டடியில்?

கலைஞரின் மகனா? கட்டாயம் தாக்கவேண்டும். அவரின் அலறல் சத்தம் ஆதிக்க ஆட்சியாளர்களின் அகத்தை குளிர்விக்க வேண்டும் என்றல்லவா தளபதியவர்களின் மீது காட்டுதர்பார் காவல்துறை அதிகாரிகள் தாக்குதலை நாளும் நடத்தினர்.



வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

எத்தனை துன்பம் நேரிடினும், அத்தனையையும் அமைதியாய் ஏற்று, உலைகளத்தில் உருபெற்ற போர்வாளாய், எதையும் தாங்கும் இரும்பு இதயத்துடன் தலைவர் தளபதியவர்கள் ஓராண்டு மிசா சிறைக்கொடுமைகளை தாங்கிக் கொண்டார்கள்.

1980-லே இளைஞரணி துவக்கப்பட்ட பின் அதன் தலைமைப் பொறுப்பேற்று தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று கழகப் பணியாற்றி, பல்லாயிரக்கணக்கான கருப்பு சிவப்பு இருவண்ணக் கொடிகளை ஏற்றி, தி.மு.க.வின் மூன்றாம் தலைமுறைத் தலைவராய், முழுநிலவாய் வடிவம் கொண்டார்.

தலைவர் கலைஞர் அவர்களையடுத்து, கழகத் தொண்டர்களை ஈர்க்கும் வசீகரம் நமது தளபதியவர்களுக்கு இயற்கையாகவே அமைந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒரு ராயபுரம் அறிவகம்! தலைவர் கலைஞர் அவர்களுக்கு தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயம்! நமது தளபதியவர்களுக்கோ, அன்பகம் - கழக இளைஞரணி அலுவலகம்.

1984 -ல் ஆயிரம் விளக்கில் தேர்தல் அரசியலில் களம் கண்ட தளபதியவர்கள் எம். ஜி. ஆர் நோயுற்றிருந்த பரிதாபமும், இந்திராகாந்தி மறைந்ததால் இந்தியா முழுவதும் ஏற்பட்ட அனுதாப அலையால் வெற்றி வாய்ப்பினை இழந்தாலும், ஆயிரம் விளக்கு தொகுதிக்கு தன்னை அர்ப்பணித்து, அயராத சமூகப் பணியால், அம்மக்களின் அன்பைப்பெற்று, மீண்டும் 1989- ல் ஆயிரம் விளக்கில் தனது தேர்தல் அரசியலின் ஜனநாயக கணக்கை துவங்கினார்.

1996 -ல் தனது 44 வது வயதில் சென்னை மாநகராட்சியின்44வதுமேயராக,சர்.பிட்டி.தியாகராயருக்குப் பிறகு பெருவாரியான மக்களால் நேரடியாகத் தேர்வு பெற்ற மேயர் எனும் பெருமைப் பெற்றார்.

அவரது பதவி காலத்தில் தான் சீர்மிகு சென்னை, சிங்காரச் சென்னையாக சிறப்புற்று விளங்கியது. எண்ணற்ற பாலங்கள், சாலைகள், புதிய போக்குவரத்து வழி வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி புரிந்தாலும், தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையை தளபதியவர்கள் ஆட்சி புரிந்த பாங்கு, போற்றுதலுக்குரியது.

2003 விழுப்புரத்தில் நடந்த கழக மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்று, பின்னர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், பொருளாளர், செயல்தலைவர், கழகத் தலைவர் என தி.மு.க.வின் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றவர், நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு 2018 ஆம் ஆண்டு கழகத்தின் தலைவராக பொறுப்பேற்று, அந்த நாள் முதல் இந்தநாள் வரை தொடுத்த போரிலெல்லாம் தொல்வியே காணாத பிரஞ்சு பெருவீரன் நெப்போலியனைப் போன்று, எதிர்க்கட்சிகளுக்கு தவிர்க்க முடியாத தலைவலியை கொடுத்துக் கொண்டே வருகிறார்.

தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமின்றி, இந்தியாவின் பிரதம அமைச்சர் மோடிக்கும், அவரது காவிச்சேனைகளுக்கும், கசப்பு மருந்தாய், சுயமரியாதை சூரணமாய், ஜீரணிக்கவே முடியாத ஜனநாயகத் தலைவராய் வெற்றி வலம் வருகிறார் நமது கம்பீரத் தலைவர் தளபதியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை , “ இந்தியாவின் வரலாறு கங்கையிலிருந்து அல்ல, காவிரி தீரத்திலிருந்து எழுதப்பட வேண்டும்! “ என்றார்.

அவரது கனவை தலைவர் கலைஞர் அவர்கள் பல முறை, பல பிரதமர்களை, குடியரசுத் தலைவர்களை அடையாளம் காட்டி நிறைவேற்றினார். அவரது அடிச்சுட்டில் அணுவளவும் மாறாமல் பயணிக்கும் தளபதிய வர்கள் இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகளின் ஒரு மித்தக் குரலாய், ஒற்றை மனிதராய், ஜனநாயக காவலராய், மாநில சுயாட்சி தீபமேந்திய மாவீரராய், சனாதன, ஆரியக்கும்பலை வேரறுக்கும் ஆற்றல் மிக்கவராய் காட்சி தருகிறார்.

மார்ச் 1- அவரது பிறந்தநாள்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக, வேலிதாண்டும், வெள்ளாடாய், செவ்வாழைத் தோட்டத்தில் குதித்தாடும் சிரங்கு பிடித்தக் குரங்கைப் போல், அப்போதைக்கப்போது, நம்மை தொட்டுப் பார்த்து, தலையில் குட்டு வாங்கி, வாலறுந்து ஓடும் வடநாட்டு இந்தி, இன்றும் தனது கோர முகத்தை மும்மொழி கொள்கை எனும் வடிவில் மீண்டும் காட்டி வருகிறது.

இந்திக்கு இனி இங்கு இடமில்லை! என்று அண்ணா அவர்கள் 55 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டமியற்றி அணை போட்டு தடுத்த பின்பும், தலைவர் கலைஞர் பல போராட்டங்கள் மூலம் பலமான எதிர்ப்பை பதிந்த பின்னும், இந்தியை திணித்தே தீருவோம் என்ற திமிரோடு வந்தால், “எப்பக்கம் வந்து விடும் இந்தி? அதன் இடுப்பொடிக்க கிளம்பிற்றுக் காண் தமிழச்சிங்கக் கூட்டம்!” என்று தலைவர் கலைஞர் அவர்களால் உரமேற்றப்பட்ட இளைஞர் படை பல்கிப் பெருகி, அதே உணர்வோடு தளபதியவர்களின் தலைமையின் கீழ் தயாராக இருக்கிறது.

ஆளும்கட்சியாகத்தான் இருக்கிறோம். அதற்காக சொரணையற்று, சுயமரியாதை இழந்து சும்மாயிருக்கமாட்டோம்!

‘வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!’ எனும் தலைவர் கலைஞரின் உணர்வு மிக்க வரிகள் உயிரில், உதிரத்தில் ஏற்றுக் கொண்ட கன்னித்தமிழ் காவலர் தளபதியவர்கள் முன்னெடுக்கும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர் பிரகடனங்களை உயிரைக் கொடுத்தும் நிறைவேற்றிக் காட்டுவோம்!

ஆவியிழந்தேனும், காவிக் கூட்டத்தை ஓட, ஓட விரட்டுவோம்!

தமிழ்நாட்டு வரிப்பணத்தை தமிழருக்கு வழங்காமல், ஆபத்திற்குதவாத பிள்ளையாய், அரும்பசிக்குதவாத அன்னமாய், தாகத்தைத் தீர்க்காத தண்ணீராய் நம்மை கண்ணீரில் தவிக்கவிடும் ஒன்றிய அரசிற்கு ஓங்கி ஒலிப்போம் நமது எதிர்ப்பை!

இதுதான், இதுதான் நாம் நமது கழகத் தலைவர் திராவிடப் பேரரசர் தளபதியவர்களுக்கு வழங்கும் பிறந்த நாள் பரிசு!

தமிழினம் தழைக்க, தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலம் சிறக்க, அவர் வாழவேண்டும் நூறாண்டு!

தமிழினத்தை வழிநடத்திப் பல்லாண்டு வாழ்க!

திக்கெட்டும் வெற்றி முரசு கொட்டும் திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் வாழ்க! வாழ்கவே!